## சி.எம்.பி.டி. மெட்ரோ ரெயில் நிலையத்தில்

# 100 கிலோவாட் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம்

## மெட்ரோ நிர்வாகம் ஏற்பாடு

சென்னை, ஆக.29–
சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மெட்ரோ நிலையங்கள் மற்றும் கோயம்பேடு பணிமனையில் சூரிய சக்தியை பயன்படுத்தி 5.3 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. சூரியசக்தி மின் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் கோயம்பேடு புறநகர் பஸ்நிலைய(சி.எம்.பி.டி.) மெட்ரோ நிலையத்தின் கூரை மீது 100 கிலோ வாட் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையத்தை அமைத்துள்ளது.

2019–ம் ஆண்டு இறுதிக்குள் 8 மெகாவாட் சூரியசக்தி மின் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் ஆண்டுதோறும் 116.80 லட்சம் யூனிட் மின் உற்பத்தி செய்யப்படும். இதனால் ஆண்டுக்கு ரூ.2.54 கோடி சேமிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.